## செப்டம்பர் - 17

**"கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்." - கொலோ 1 : 27.**

ஒரு திட்டமான தனிப்பட்ட கிறிஸ்தவ குணத்தை ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் உடையவனாக இருக்க வேண்டும். அது தொடர்ந்திருத்தல் வேறு எந்த கிறிஸ்தவனின் ஆவிக்குரிய ஜீவியத்தின் மேலும் சார்ந்திராததாயிருக்க வேண்டும். தனெக்கென்று ஒரு நிர்மானிக்கப்பட்ட குணத்தை ஒரு ஆவிக்குரிய பிரத்தியோக குணத்தைக் கொடுக்கிற அந்த ஜீவனின் தத்துவங்கள் (அடிப்படையான உண்மைகள் முதலியவற்றை) மற்ற கிறிஸ்தவர்களால் அறிவிக்கப்பட்டு, உதாரணங்காட்டி விளக்கப்பட்டிருக்கிற சத்தியத்தின் வார்த்தைகளிலிருந்து அவன் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் நம்மைப் போஷித்து, குணத்தின் நிறைவுக்கு நம்மை முன்னுக்கு கொண்டுவந்த அந்த ஆவிக்குரிய ஜீவியத்தையுடைய அன்புக்குரிய சகோதரனோ, சகோதரியோ விழுந்துபோனாலும் (அப்படி நேரிடுவது கூடாதது அல்ல என்று அப்போஸ்தலன் காட்டுகிறார் எபி 6 : 4 - 6; கலா 1 : 8) சத்தியத்தின் ஆவியை தானே உபயோகித்துக்கொள்ள திறமையுடையவர்களாயிருந்து நாம் இன்னமும் பிழைத்திருக்கத்தக்கதாகவும் ஒவ்வருவருடைய ஆவிக்குரிய பிரத்யோகக் குணமும் அவ்வளவு உறுதியானதும் திட்டமானதுமாக இருக்க வேண்டும். **- Z ’03, 375 (R 3250)**

கிறிஸ்து உங்களுக்குள் இருப்பது புது சிருஷ்டியைக் குறிக்கிறது. சுவிசேஷ யுகத்திலுள்ள ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்களின் இருதயத்திலும் மனதிலும் இருக்க வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. இருதயம் மனது இரண்டுக்கும் நோக்கம் வாய்ப்பு இவைகளில் ஆவிக்குரிய புது திராணிகளை அது கொடுக்கிறது அவர்களுடைய தற்காலத்துக்குரிய உத்தியோகத்துக்கும் அதிலே உண்மையுள்ளவர்களாகத் தொடர்ந்து இருப்பார்களானால் அவர்களுடைய வருங்கால உத்தியோகத்துக்கும் அவர்களைத் தகுதியாக்குகிற பரிசுத்த அபிஷேகமாய் அது இருக்கிறது. இதுதான் எல்லா இரகசியங்களின் இரகசியமான அந்த தேவனுடைய இரகசியமாயிருக்கிறது. கிறிஸ்து ஒருவராயிராமல் அநேக அங்கங்களைக் கொண்டதாய் இருப்பது அதில் யேசு தலையான அங்கமும் சபை சரீரத்தின் அங்கங்களுமாகும். இந்த மகிமையான "கிறிஸ்து உங்களுக்குள் இருக்கும்" நிலை உயர்ந்ததாயும், பரிசுத்தமுள்ளதாயும், பரலோகத்துக்குரியதாயும் இருந்தது. இந்த மகிமையின் நம்பிக்கை சுதந்திரத்தின் பரிசு அதாவது தெய்வீக இருதயமும் மனமும். இது பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த சுதந்திரத்தின் ஒரு பாகம். **- P ’36, 110.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 3:16; அப் 10:38; 2:1-4; 10:45-47; 2கொரி 1:21; 1யோவா 2:20,27; 1கொரி12:12,13; 15:23; கலா 3:16,29; எபே 4:13,23,24; கொலோ 1:23; 1பேது 4:13; எபி3:14; ரோம 8:10; யோவா 14:19; 17:23,24; கலா 2:20; பிலி 1:21; 2கொரி 4:16; எபே3:16; யோவா 15:2-7; ரோம 12:4,5; 1கொரி 1:30; ரோம 6:3; 13:14; கலா 3:26,27; 2கொரி 5:17; கொலோ 3:10; ரோம 8:4,5.**

**கோபுர வாசிப்பு : Z ’13, 131 (R 5227).**

**வினாக்கள் : இவ்வசனம் இந்த வாரத்தில் எனக்கு எவ்வாறு இருந்தது? எந்த சந்தர்ப்பங்களில்? என்ன பலனோடு?**